நீலகிரி மாவட்டம் சார்பு நீதிமன்றத்தில் **2025-**ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் **29-**ஆம் நாள் சாட்சியாகிய-காசி கேசவன் என்பவரின் வாக்குமூலம் **1969-** ஆம் ஆண்டு **44** வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி**.** ரேகா**,** நிலை **2** பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/ சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறது**.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **:** காசி கேசவன் | மதம் | **:** |
| தந்தை**.**/கணவர் பெயர் | **:** சந்திரன் | ஜாதி | **:** |
| கிராமம் | **:** | தொழில் | **:** |
| தாலூக்கா | **:** | வயது | **:** |

---

**29.1.2025 - (** துவங்கப்படும் நேரம் **- 2.15 )(**முடிக்கப்பட்ட நேரம்**-2.20)**

**O.S. No.168/2024 (P.W.1)**

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது தரப்பு முதல் விசாரணை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது எனது கைொப்பம் தான். அது நான் சொல்லி தயார் செயயப்பட்டது. அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். 30.12.2016 தேதியிட்ட அசல் கடன் விண்ணப்பம் வா**.**சா**.**ஆ**.1** ஆகும். 30.12.2016 ஆம் தேதியிட்ட கடன் செலுத்த வேண்டிய முறை கடிதம் அசல் வா**.**சா**.**ஆ**.2** ஆகும். 30.12.2016 ஆம் தேதியிட்ட கொதுவை ஒப்பந்தத்தின் அசல் வா**.**சா**.**ஆ**.3** ஆகும். 21.2.2019 ஆம் தேதியிட்ட பிரதிவாதிகள் வாதிக்கு கொடுத்த புதுப்பிப்புக் கடிதம் அசல் வா**.**சா**.**ஆ**.4** ஆகும். 16.9.2021 ஆம் தேதியிட்ட பிரதிவாதிகள் வாதிக்கு கொடுத்த உயிர்ப்புக் கடிதம் அசல் வா**.**சா**.**ஆ**.5** ஆகும். 16.5.2022 ஆம் தேதியிட்ட பிரதிவாதிகள் வாதிக்கு கொடுத்த உயிர்ப்பு கடிதம் அசல் வா**.**சா**.**ஆ**.6** ஆகும். 17.8.2024 ஆம் தேதியிட்ட கணக்கு பட்டியல் வட்டி கணக்கீடு செய்யப்பட்ட குறிப்பாணையுடன் கூடியது. வா**.**சா**.**ஆ**. 7** ஆகும். ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என பிராத்திக்கிறேன்.